# Tamil Language Eligibility Test

| Sr. No. | Question Body and Alternatives |
|---|---|
| 1 | ‘திராவிட நாட்டின் வானம்பாடி’ என்று பாராட்டப் பெற்றவர் |
| | (A) மீரா |
| | (B) முடியரசன் |
| | (C) அப்துல் ரகுமான் |
| | (D) கண்ணதாசன் |
| 2 | ‘தண்பொருநைப் புனல் நாடு’ என்று சேக்கிழாரால் புகழப்படும் மலைவளம் மிகுந்த ஊர் |
| | (A) திருச்செந்தூர் |
| | (B) திருத்தணி |
| | (C) திருநெல்வேலி |
| | (D) திருப்பரங்குன்றம் |
| 3 | ‘ஜெயகாந்தனோடு பல்லாண்டு’ என்ற நூலை எழுதியவர் |
| | (A) ந. பிச்சமூர்த்தி |
| | (B) பி.ச. குப்புசாமி |
| | (C) கு.ப. ராஜகோபாலன் |
| | (D) சி.சு. செல்லப்பா |
| 4 | தன்மை நவிற்சி அணியின் வகைகள் |
| | (A) இரண்டு |
| | (B) மூன்று |
| | (C) நான்கு |
| | (D) ஆறு |
| 5 | ‘ஸயன்ஸுக்கு பலி’ என்ற சிறுகதையைப் படைத்தவர் |
| | (A) ந. பிச்சமூர்த்தி |

(B) சி.சு செல்லப்பா

(C) தருமு சிவராமு

(D) அப்துல் ரகுமான்

6 ‘மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும்’ – என்று கூறியவர்

(A) திருஞானசம்பந்தர்

(B) மாணிக்கவாசகர்

(C) திருமூலர்

(D) திருநாவுக்கரசர்

7 செய்யுளில் ஓரிடத்தில் நின்ற சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்கும் அணி

(A) தீவக அணி

(B) தற்குறிப்பேற்ற அணி

(C) தன்மை அணி

(D) நிரல்நிறை அணி

8 சந்திப் பிழைகளற்ற தொடரைத் தேர்க.

(A) ஊர்ச்செழிக்க தொழில் செய்யும் உழைப்பாளிகள்

(B) ஊர்செழிக்கத் தொழில்செய்யும் உழைப்பாளிகள்

(C) ஊர்செழிக்க தொழில்செய்யும் உழைப்பாளிகள்

(D) ஊர்ச்செழிக்கத் தொழில்செய்யும் உழைப்பாளிகள்

9 உயிர்த்தொடர் குற்றியலுகரத்தைத் தேர்க.

(A) நாக்கு

(B) மார்பு

(C) முதுகு

(D) காது

10 ‘உறுபொருள்’ என்பதன் இலக்கணக்குறிப்பு

(A) வினைத்தொகை

(B) வேற்றுமைத்தொகை

(C) உரிச்சொல் தொடர்

(D) பண்புத்தொகை

11 பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.

(A) அப்பாவின் சிநேகிதர் – அசோகமித்ரன்

(B) மின்சாரப் பூ – ஆதவன்

(C) சூடிய பூ சூடற்க – நாஞ்சில் நாடன்

(D) அன்பளிப்பு – அழகிரிசாமி

12 “இந்தப் பெரியவரின் அடிநிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும்” என்று காந்தியடிகள் குறிப்பிட்ட அறிஞர்

(A) நாமக்கல் கவிஞர்

(B) உ.வே. சாமிநாதர்

(C) பாரதிதாசன்

(D) பாரதியார்

13 ‘அருமை உடைய செயல்’ – இக்குறளடிக்குப் பொருத்தமான வாய்பாடு வரிசை

(A) தேமா, புளிமா, நாள்

(B) புளிமா, தேமா, மலர்

(C) தேமா, கூவிளம், நாள்

(D) புளிமா, புளிமா, மலர்

14 வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தியைக் கூறும் நூல்

(A) தொல்காப்பியம்

(B) கார்நாற்பது

(C) பதிற்றுப்பத்து

(D) நற்றிணை

15 முதல் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற நாடு

(A) இந்தியா

(B) சிங்கப்பூர்

(C) இலங்கை

(D) மலேசியா

16 “இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும், ஆத்மாவும் தமிழர்கள்தான்” என்று கூறியவர்

(A) நேதாஜி

(B) காந்திஜி

(C) மார்ஷல் நேசமணி

(D) தில்லான்

17 மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள்

(A) ற், ன்

(B) த், ந்

(C) ட், ன்

(D) க், ங்

18 விகாரப் புணர்ச்சி அல்லாத சொல்லைத் தேர்க.

(A) மரவேர்

(B) கற்குவியல்

(C) வாழைத்தோட்டம்

(D) பொன்மலை

19 ‘மூடுபனி’ – இலக்கணக்குறிப்பைத் தேர்க.

(A) பெயரெச்சம்

(B) வினையெச்சம்

(C) வினைத்தொகை

(D) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

20 ‘அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன்’ – இத்தொடரில் பயின்றுவரும் ஆகுபெயர்.

(A) பண்பாகு பெயர்

(B) தொழிலாகு பெயர்

(C) கருத்தாவாகு பெயர்

(D) முதலாகு பெயர்

21 பின்வருவனவற்றுள் சரியான அகர வரிசையைத் தேர்க.

(A) ஒன்று, ஐந்து, கண்ணன், நன்றி, சிறகு

(B) ஐந்து, ஒன்று, சிறகு, நன்றி, கண்ணன்

(C) ஒன்று, ஐந்து, சிறகு, கண்ணன், நன்றி

(D) ஐந்து, ஒன்று, கண்ணன், சிறகு, நன்றி

22 கீழ்க்காண்பவற்றுள் பொதுமொழி அல்லாதது

(A) வைகை

(B) வேங்கை

(C) பலகை

(D) படுக்கை

23 ‘கழிந்த பெரும் <u>கேள்வியினான்</u>’ – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு

(A) வினைச்சொல்

(B) வினையாலணையும் பெயர்

(C) வினைத்தொகை

(D) வினைத்தொடர்

24 ‘எல்’ என்பதன் பொருள்

(A) கதிரவன்

(B) சந்திரன்

(C) செவ்வாய்

(D) புதன்

25 உவமையை மட்டும் கூறி அதன் மூலம் கூற வந்த கருத்தை உணர வைப்பது

(A) வேற்றுமை அணி

(B) பிறிது மொழிதல் அணி

(C) உவமையணி

(D) இரட்டுற மொழிதல் அணி

26 கருத்துப்பட ஓவியங்களைத் தமிழில் முதன்முதலில் வெளியிட்ட இதழ்

(A) இந்தியா

(B) சுதேசமித்திரன்

(C) மணிக்கொடி

(D) விஜயா

27 பின்வருவனவற்றுள் முன்னிலைப் பெயர்களைத் தேர்க.

(A) நீ, நீர்

(B) நான், யான்

(C) அது, அவை

(D) எனது, எமக்கு

28 திருவள்ளுவர் தவச்சாலையை அமைத்தவர்

(A) இரா. இளங்குமரனார்

(B) வ.உ. சிதம்பரனார்

(C) மறைமலையடிகள்

(D) தேவநேயப்பாவாணர்

29 சாத்தனாரை ‘தண்டமிழ் ஆசான்’, ‘சாத்தன் நன்னூற் புலவன்’ என்று புகழ்ந்து கூறியவர்

(A) தெ.பொ. மீனாட்சி சுந்தரம்

(B) கம்பன்

(C) பாரதியார்

(D) இளங்கோவடிகள்

30 "ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது வடமொழி" என முதன்முதலில் குறிப்பிட்டவர்.

(A) பிரான்சிஸ் எல்லீஸ்

(B) அறிஞர் வில்லியம் ஜோன்ஸ்

(C) கால்டுவெல்

(D) மாக்ஸ்முல்லர்

31 பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | அப்துல் நேற்று வந்தான் | 1. | கட்டளைத் தொடர் |
| (b) | உரை கவிதாவால் படிக்கப்பட்டது | 2. | தன்வினைத் தொடர் |
| (c) | குமரன் மழையில் நனையவில்லை | 3. | செயப்பாட்டு வினைத் தொடர் |
| (d) | பூக்களைப் பறிக்காதீர் | 4. | எதிர்மறை வினைத் தொடர் |

(A) (a) 2 (b) 4 (c) 3 (d) 1

(B) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

(C) (a) 1 (b) 4 (c) 2 (d) 3

(D) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

32 பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | குடமுழா | 1. | பணிலம் |
| (b) | சேகண்டி | 2. | பாண்டில் |
| (c) | சாலரா | 3. | பஞ்சமகா சப்தம் |
| (d) | சங்கு | 4. | சேமங்கலம் |

(A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

(B) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

(C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

(D) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

33 பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம் | 1. | கம்பராமாயணம் |
| (b) | பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின் | 2. | திருவாசகம் |
| (c) | பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை | 3. | சிலப்பதிகாரம் |
| (d) | பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம் | 4. | மணிமேகலை |

(A) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

(B) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

(C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

(D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

34

பொருத்தி விடை தேர்க :

| | நூல் | | நூலாசிரியர் |
|---|---|---|---|
| (a) | தமிழர் நாகரிகமும் பண்பாடும் | 1. | கா. ராஜன் |
| (b) | தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் | 2. | அ. தட்சிணாமூர்த்தி |
| (c) | தொல்லியல் நோக்கில் சங்க காலம் | 3. | சு. வித்யானந்தன் |
| (d) | தமிழர் சால்பு | 4. | மா. இராசமாணிக்கனார் |

(A) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

(B) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

(C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

(D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

35

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | கவிஞர் தமிழ்ஒளி | 1. | வணக்கம் வள்ளுவ |
| (b) | ஈரோடு தமிழன்பன் | 2. | தமிழர் சமுதாயம் |
| (c) | பாரதிதாசன் | 3. | கட்டற்ற கவிதை |
| (d) | ந. பிச்சமூர்த்தி | 4. | தமிழியக்கம் |

(A) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

(B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

(C) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

(D) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

36

பொருத்தி விடை தேர்க :

| | ஆசிரியர் | | நூல் |
|---|---|---|---|
| (a) | நாகூர் ரூமி | 1. | சாந்தகுமாரி |
| (b) | தி.சொ. வேணுகோபாலன் | 2. | கற்பாவை |
| (c) | உமா மகேஸ்வரி | 3. | ஏழாவது சுவை |
| (d) | சா. கந்தசாமி | 4. | மீட்சி விண்ணப்பம் |

(A) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

(B) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

(C) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

(D) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

37

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | காலின் ஏழடிப் பின் சென்று | 1. | கலிங்கத்துப்பரணி |
| (b) | அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும் | 2. | குறுந்தொகை |
| (c) | பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் | 3. | பொருநராற்றுப்படை |
| (d) | விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல | 4. | நற்றிணை |

(A) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

(B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

(C) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

(D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

38

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | கவிஞர் அறிவுமதி | 1. | கரும்பலகை யுத்தம் |
| (b) | கிருபானந்தவாரியார் | 2. | நட்புக் காலம் |
| (c) | பிரளயன் | 3. | திருக்குறள் கதைகள் |
| (d) | மலாலா | 4. | கல்வியில் நாடகம் |

(A) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

(B) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

(C) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

(D) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

39

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | தீபம் | 1. | அதிமதுரத்தழை |
| (b) | மயில் | 2. | மலர்கள் |
| (c) | பன்றி | 3. | நடனம் |
| (d) | யானை | 4. | கிழங்கு |

(A) (a) 4 (b) 1 (c) 3 (d) 2

(B) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

(C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

(D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

40

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | தண்ணீர் | 1. | பறி |
| (b) | பால் | 2. | குடி |
| (c) | பூ | 3. | பருகு |
| (d) | இலை | 4. | கொய் |

(A) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

(B) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

(C) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

(D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

41

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | முகில் | 1. | எமன் |
| (b) | சேகரம் | 2. | சேதம் |
| (c) | வின்னம் | 3. | கூட்டம் |
| (d) | காலன் | 4. | மேகம் |

(A) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

(B) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

(C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

(D) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

42

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | இன்பம் தருவது | 1. | நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம் |
| (b) | நட்பு என்பது | 2. | குன்றிமணியளவு தவறு |
| (c) | பயனின்றி அழிவது | 3. | பண்புடையவர் நட்பு |
| (d) | பெருமையை அழிப்பது | 4. | சிரித்து மகிழ மட்டுமன்று |

(A) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

(B) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

(C) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

(D) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

43

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | வாரணம் | 1. | அழகு |
| (b) | சிங்காரம் | 2. | குதிரை |
| (c) | பரி | 3. | பாக்கு |
| (d) | கமுகு | 4. | யானை |

(A) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

(B) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

(C) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

(D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

44

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் | 1. | ஔவை |
| (b) | நீரின்றி அமையாது உலகம் | 2. | இளங்கோவடிகள் |
| (c) | சனி நீராடு | 3. | ஆண்டாள் |
| (d) | குள்ளக் குளிர குடைந்து நீராடி | 4. | திருவள்ளுவர் |

(A) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

(B) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

(C) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

(D) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

45

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | படுக்கையாகிறது | 1. | தூக்கி + கொண்டு |
| (b) | தூக்கிக் கொண்டு | 2. | விழித்து + எழும் |
| (c) | விழித்தெழும் | 3. | படுக்கை + ஆகிறது |
| (d) | குணங்களெல்லாம் | 4. | குணங்கள் + எல்லாம் |

(A) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

(B) (a) 3 (b) 1 (c) 2 (d) 4

(C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

(D) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

46

உரிச்சொற்களுக்கு ஏற்ற சொற்களைப் பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | சால | 1. | சிறிது |
| (b) | கடி | 2. | நன்று |
| (c) | நனி | 3. | சிறந்தது |
| (d) | தவ | 4. | நகர் |

(A) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

(B) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

(C) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

(D) (a) 4 (b) 2 (c) 3 (d) 1

47

ஒலி/பொருள் வேறுபாடறிந்து பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | குரங்கிடம் இருப்பது | 1. | வாள் |
| (b) | மன்னரிடம் இருப்பது | 2. | வால் |
| (c) | நுட்பமான திறமை | 3. | களை |
| (d) | பயிர் அல்லாத தாவரங்கள் | 4. | கலை |

(A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

(B) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

(C) (a) 1 (b) 3 (c) 4 (d) 2

(D) (a) 4 (b) 2 (c) 3 (d) 1

48

பொருத்தி விடை தேர்க :

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (a) | மயலுறுத்து | 1. | சக்கரம் |
| (b) | ப்ராண-ரஸம் | 2. | தோள் |
| (c) | நேமி | 3. | மயங்கச் செய் |
| (d) | சுவல் | 4. | உயிர்வளி |

(A) (a) 4 (b) 1 (c) 3 (d) 2

(B) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

(C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

(D) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

49

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | இயற்கை இன்பக்கலம் | 1. | திருக்குறள் |
| (b) | இயற்கை வாழ்வில்லம் | 2. | கலித்தொகை |
| (c) | இயற்கை தவம் | 3. | பத்துப்பாட்டு |
| (d) | இயற்கை ஓவியம் | 4. | சிந்தாமணி |

(A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

(B) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

(C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

(D) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

50

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | முரலும் | 1. | பொறுத்தல் |
| (b) | பண் | 2. | பொறுமை |
| (c) | நோன்றல் | 3. | முழங்கும் |
| (d) | பொறை | 4. | இசை |

(A) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

(B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

(C) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

(D) (a) 4 (b) 3 (c) 1 (d) 2